**<u>அசல் வழக்கு எண். 43/2019</u>**

**06.02.2025**

**பெயர் – சுந்தரசாமி (Pw2)**

**<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

(1) இந்த வழக்கை யார் தாக்கல் செய்துள்ளார் என்றால் முருகேசன் என்பவர் தாக்கல் செய்துள்ளார். முருகேசன் தாக்கல் செய்த பிராதை நான் படித்துப் பார்த்தேன் என்றால் சரிதான். என்ன பரிகாரம் கோர் முருகேசன் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் 2008ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட உயிலின் அடிப்படையில் அவருக்கு நிலம் வேண்டி வழக்கு தாக்கல் செய்துள்ளார். வாதி முருகேசன் அவரது சாட்சியத்திலும், குறுக்கு விசாரணையிலும் என்ன சாட்சியம் அளித்துள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. என்னை சாட்சியம் அளிக்க யார் ? அழைத்து வந்தார்கள் என்றால் சின்னச்சாமி கவுண்டர் என்பவர் அழைத்து வந்தார். மேற்கூறிய சின்னச்சாமி கவுண்டர் தற்போது உயிருடன் உள்ளாரா என்றால் அவர் 11.07.2012ம் தேதி இறந்துவிட்டார். எனக்கு பல சிவில் மற்றும் கிரிமினல் வழக்குகளில் சாட்சியம் கூறி அனுபவம் உள்ளது என்றால் சரியல்ல. நிறைய வழக்குகளில் நான் சாட்சியம் அளிக்கவில்லை. என் மேல் தொடுக்கப்பட்ட வழக்கில் சாட்சியம் அளித்துள்ளேன்.

(2) இந்த நீதிமன்றம் முன்பு அசல் வழக்கு எண்.51/2019 என்ற வழக்கில் நான் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் சரிதான். அது நான் தாக்கல் செய்த வழக்கு என்பதால் சாட்சியம் அளித்தேன். இந்த வழக்கின் பிரதிவாதிகளான சக்திவேல், முத்துச்சாமி மற்றும் பொன்னுச்சாமியின் எதிர்வாத உரையில் குறிப்பிட்டுள்ள விவரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. 2008ம் ஆண்டு ஏற்படுத்தப்பபட்ட வா.சா.ஆ.3 உயிலை நான் கடைசியாக எப்போது பார்த்தேன் என்றால் உயில் எழுதப்பட்ட தினத்தன்று பார்த்தேன். அதன் பின்னிட்டு நான் அந்த உயிலை பார்க்கவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.3 உயிலில் யார், யார் ? சாட்சி கையெழுத்து இட்டுள்ளோம் என்றால் நானும், ஈஸ்வரன் என்பவரும் சாட்சி கையெழுத்து இட்டுள்ளோம். நானும், ஈஸ்வரனும் மட்டும் சாட்சிகளாக கையெழுத்திட்ட உயில் ஆவணம் தான் சின்னச்சாமி கவுண்டரால் 2008ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட வா.சா.ஆ.3 உயில் ஆவணம் என்றால் சரிதான். மேற்படி உயிலில் வேறு நபர்கள் சாட்சி கையொப்பம் செய்திருந்தார்கள் என்றால் மேற்கண்ட உயில் தவறானது

என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. ஆனால் நானும், ஈஸ்வரனும் 2008 ம் ஆண்டு சின்னச்சாமி கவுண்டல் சொல்லி உயிலில் கையெழுத்திட்டோம்.

(3) உயில் ஆவணம் எத்தனை பக்கங்களை கொண்டது என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. உயில் ஆவணமானது பத்திர தாளில் தயாரிக்கப்பட்டதா ? அல்லது சாதாரண தாளில் தயாரிக்கப்பட்டதா என்றால் பத்திர தாளில் தயாரிக்கப்பட்டது. உயில் ஆவணத்தில் எத்தனை முத்திரைத் தாள்கள் மற்றும் எத்தனை ரூபாய் மதிப்புள்ள முத்திரை தாள்களில் உயில் ஆவணம் தயாரிக்கப்பட்டது என்றால் அதை நான் பார்க்கவில்லை. உயில் ஆவணத்திற்கு ஏதேனும் மாதிரி உயில் ஆவணம் தயாரிக்கப்பட்டதா என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.3 ஆவணம் தான் நான் மேற்சொன்ன உயில் ஆவணமா என்றால் சரிதான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். வா.சா.ஆ.3 ஆவணத்தில் பக்கம் 2 ல் சக்தி என்பவர் என்னுடன் கையொப்பமிட்டுள்ளதாக காணப்படுகிறது என்றால் சக்தி என்ற நபரை நான் பார்க்கவில்லை அவர் என்னுடன் கையெழுத்து போடவில்லை. மேற்கூறிய சக்தி என்பவர் யார் ? அழைத்து வந்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். மேற்கூறிய வா.சா.ஆ.3 ஆவணம் தயாரிக்கப்பட்ட சமயத்தில் மேற்படி சக்தியை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ஆவணம் எங்கு வைத்து, யாரால் தயாரிக்கப்பட்டது என்றால் கணியூர் சார் பதிவாளர் அலுவலகத்தில் தயாரிக்கப்பட்டது.

(4) மேற்கூறிய வா.சா.ஆ.3 ஆவணத்தை யார் தயார் செய்தார்கள் என்றால் தென்னரசு என்பவர் தயார் செய்தார். தென்னரசு தயார் செய்து நான் சாட்சி கையொப்பம் செய்த உயில் தான் 2008 ம் ஆண்டு சின்னச்சாமி கவுண்டரால் ஏற்படுத்தப்பட்ட உண்மையான உயில் ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.3 –ல் வேறு நபர் தயார் செய்ததாக குறிப்பிடப்பட்டிருந்தாலும் சாட்சிகளாக மற்ற நபர்களும் கையெழுத்து செய்திருந்தாலும் அது சின்னச்சாமி கவுண்டர் எழுதி வைத்த உண்மையான உயில் அல்ல என்றால் சரிதான். வா.சா.ஆ.3 உயில் ஆவணம் தயார் செய்யப்பட்ட போது சின்னச்சாமி கவுண்டரின் வயது என்ன என்றால் 67 வயது இருக்கும். வா.சா.ஆ.3 உயிலில் சொத்து விவரத்தில் எவ்வளவு இடம் விஸ்தீர்ணம் குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 20

செண்ட் நிலம் குறித்து குறிப்பிடப்பட்டுள்ளது. சின்னச்சாமி கவுண்டர் தாவாச் சொத்தைப் பொறுத்து முத்துச்சாமி என்பவருக்கு ஒரு பொது அதிகார ஆவணம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.7 மேற்கண்ட பொது அதிகார ஆவணம் என்றால் எழுதிக் கொடுத்துள்ளார். அந்த ஆவணம் வா.சா.ஆ.7 ஆவணமா என்ற விவரம் தெரியாது.

(5) மேற்கூறிய வா.சா.ஆ.7 பொது அதிகார ஆவணம் வா.சா.ஆ.3 உயில் ஆவணம் ஏற்படுத்துவதற்கு முன்பே 2007 ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். மேற்கூறிய விவரம் எனக்கு ஏற்கனவே தெரியும் என்றால் சரிதான். நான் எனது முதல் விசாரணை சாட்சியத்தில் சின்னச்சாமி கவுண்டர் மற்றும் ஒரு உயில் ஆவணம் ஏற்படுத்தியுள்ளதாக நான் கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு அதைப் பற்றிய விவரம் எதுவும் தெரியாது. மேற்கண்டவாறு மற்றும் ஒரு உயில் ஆவணம் 2010 ம் ஆண்டு ஏற்படுத்தியதாக எனது முதல் விசாரணை சாட்சியத்தில் குறிப்பிட்டிருந்தால் அது தவறு என்றால் சரிதான். அது நான் சொன்னது அல்ல. நான் எனது முதல் விசாரணை சாட்சியத்தில் மேற்கண்ட விவரங்கள் எவ்வாறு வந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

(6) மேற்கண்ட ஆவணங்களில் முருகேசன் என்பவர் க.ச.எண்.68/1 கருப்பராயன் கோவிலில் அன்றாடம் நித்திய பூஜை செய்கிறார் என்றோ அல்லது அவர் பூசாரியாக செயல்பட்டு வருகிறார் என்றோ குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல. உயிலில் குறிப்பிடப்பட்டுள்ளது. *(சாட்சி தன்னுடைய குறுக்கு விசாரணையின் போது வா.சா.ஆ.3 ஆவணத்தில் இன்னரென்று நிரூபித்தவர் என்ற இடத்தில் சக்தி என்று குறிப்பிடப்பட்டுள்ளது படிக்கத் தெரியாது என்று குறிப்பிட்டுவிட்டு தற்போது வா.சா.ஆ.3 ஆவணத்தில் வாதி முருகேசன் அன்றாட பூஜை குறிப்பிடப்பட்டுள்ளதா என்ற எதிர் தரப்பு வழக்கறிஞர் கேள்விக்கு வா.சா.ஆ.3 ஆவணத்தை படித்துப் பார்த்து பதில் சொல்ல முற்பட்டு தன்னுடைய சாட்சியத்தில் முரண்பட்டு சாட்சியம் அளித்தது பதிவு செய்யப்பட்டது)* மேற்படி சாட்சி உயிலை பார்த்துவிட்டு இல்லை என்று குறிப்பிட்டார்.

தொடர் குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2025.02.06 16:58:58 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்